## மதுரையில் ‘தாய்மாமன் சீர்’ செய்யும் முதல்வரே

# மருந்துத் தட்டுப்பாட்டினால் மழலைகள் மடிவதைத் தடுக்க என்ன செய்தீர்கள்?

## தாராபுரம் சட்டமன்ற இடைத்தேர்தல் பிரச்சாரத்தில் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. கேள்வி!



**தாராபுரம், அக். 1-**

**மதுரையில் தாய்மாமன் சீர் செய்யும் முதலமைச்சரே; மருந்துத் தட்டுப்பாட்டால் மழலைகள் மடிவதைத் தடுக்க என்ன செய்தீர்கள் என தாராபுரம் தொகுதி பிரச்சாரத்தில் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி கேள்வி எழுப்பினார்.**

**திருப்பூர் மாவட்டம், தாராபுரம் தொகுதியில் உள்ள கோவிந்தபுரம் பகுதியில் தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும், நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவருமான கனிமொழி ராஜாத்தி கருணாநிதி பிரச்சாரம் மேற்கொண்டார்.**

**இந்தப் பிரசாரத்தில் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. பேசியதாவது:**

இந்த இடைத்தேர்தல் ஜனநாயகத்திற்கு எதிராக நடைபெறக்கூடிய, ஜனநாயகத்தைச் சாகடிக்கக்கூடிய வகையிலே திணிக்கப்பட்டது. மக்களுடைய உரிமைகளையும், ஜனநாயகத்தையும் நிலைநாட்டுவதற்காக நம்முடைய இயக்கத்தின் தலைவர், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் அண்ணன் தளபதி மு.க.ஸ்டாலின் தேர்ந்தெடுத்து உங்கள் கரங்களில் ஒப்படைத்திருக்கக்கூடிய வேட்பாளர், வழக்கறிஞர் சுகன்யா அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்திலே வாக்களித்து அவரை வெற்றி பெறச் செய்ய வேண்டும்.

நமது வேட்பாளர் சுகன்யார் திராவிட முன்னேற்றக் கழகத்திலே வழக்கறிஞர் அணிஅமைப்பாளராகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார். அவருடைய கணவர் இளைஞர் அணியிலே பணியாற்றிக் கொண்டிருக்கிறார். திராவிட முன்னேற்றக் கழகப் பாரம்பரியத்தில் வந்த குடும்பத்தைச் சேர்ந்த சகோதரிதான் சுகன்யா.

அதனால் என்ன சோதனை, வேதனை, கைதுகள், அச்சுறுத்தல்கள், பணப்பெட்டிகளும் கூட்கேஸ்களும் வந்தாலும் கூட மனம் மாறாமல், கொண்ட கொள்கையும் கொண்ட தலைவனும் மாறாது என்று உறுதியாக நிற்கக் கூடியவர். அப்படி ஒரு சகோதரியைத்தான் தேர்ந்தெடுத்து நம்முடைய அண்ணன் தளபதி மு.க.ஸ்டாலின் உங்கள் கரங்களிலே ஒப்படைத்திருக்கிறார்.

### மை அழியும் முன்னே பதவி விலகல்!

இந்தத் தேர்தலிலே தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டு, வெற்றி பெற உழைத்துக்கொண்டிருக்கக்கூடிய, இந்தத் தேர்தல் பணிகளின் உந்துசக்தியாக இருக்கக்கூடிய நம்முடைய கழகத்தினர் பணியாற்றி வருகின்றனர்.

கடந்த ஏப்ரல் மாதம் தமிழ்நாட்டில் தேர்தல் நடந்து முடிந்தது. ஒருவழியாக இழுத்துப்பறித்து ஒரு அரசும் ஆட்சிக்கு வந்தது. பிறகு ஏன் மீண்டும் இந்த இடைத்தேர்தல் வந்தது. ஏனெனில் நாங்கள் தூய சக்தி என்று கூறி ஆட்சிக்கு வந்தார்கள். ஆனால், அ.தி.மு.க.வில் வேட்பாளராக நின்று இரட்டை இலைக்கு ஓட்டுப் போடுங்கள் என்று கூறி உங்களிடம் ஓட்டு வாங்கிச் சென்ற ஒரு அம்மையார், அந்த மை அழியும் முன்பே பதவி விலகிவிட்டார்.

பதவி விலகிய கையோடு உங்களிடம் வந்து நன்றி கூடச் சொல்லவில்லை. இப்போது மீண்டும் வந்து நான் த.வெ.க.வில் நிற்கிறேன், விசில் அடித்துக்கொண்டு வருகிறேன், அதனால் எனக்கு வாக்களியுங்கள் என்கிறார். எனக்கு ஒரே ஒரு சந்தேகம்தான். ஏன் அ.தி.மு.க.வில் நின்று ஜெயித்தீர்கள், எது உங்களைக் கட்சி மாறச் செய்தது. இதற்கான பதிலை அவர்கள் வழங்க வேண்டும்.

### தூய சக்தியா? திருட்டு சக்தியா?

எல்லோரும் ரூ.50 கோடி ரூபாய் கைமாறியது என்று பேசுகிறார்கள். நாம் அதைப் பார்க்கவில்லை. ஆனால் அவ்வாறு பேசப்படுவதை நாமும் கேட்கிறோம். அந்த 50 கோடி ரூபாய் தூய சக்தியின் கைக்கு எப்படி வந்தது. அப்படியானால் அது தூய சக்தியா, அல்லது திருட்டுச் சக்தியா என்ற கேள்வி எழுகிறது.

இப்போது வாக்களித்த மக்களின் முகத்தில் கரியைப் பூசுவது போல இந்த இடைத்தேர்தல் நடக்கிறது. பாவம், கடந்த முறை வாக்களித்தோம்; ஏமாற்றிவிட்டுச் சென்று விட்டார்கள், அதனால் அவளுக்கே மீண்டும் ஒரு வாய்ப்பு கொடுக்கலாமா என்று நீங்கள் பரிதாபப்படலாம். ஆனால், தன் கட்சியின் சட்டமன்ற உறுப்பினரையே பத்திரமாக வைத்துக்கொள்ளத் தெரியாத ஒரு கட்சிக்கு மீண்டும் வாக்களித்து என்ன பயன் கிடைக்கப்போகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்தை எடுத்துக்கொள்ளுங்கள். ஆட்சியில் இல்லாதபோதும், நாள்தோறும் வழக்குகள், கைதுகள், சோதனைகள் வந்தபோதும் ஒரு சட்டமன்ற உறுப்பினரோ, மக்கள் பிரதிநிதியோ, நாடாளுமன்ற உறுப்பினரோ கட்சியை விட்டுப் போக வேண்டும் என்று யோசித்துக்கூடப் பார்த்ததில்லை. அதுதான் திராவிட முன்னேற்றக் கழகம். நமது தலைவர் கலைஞர் பாதுகாத்த இயக்கம், இன்று முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் முன்னெடுத்து நடத்தக்கூடிய இயக்கம்.

அதனால் சுகன்யாவுக்கு உதயசூரியன் சின்னத்திலே வாக்களித்தீர்கள் என்றால், நீங்கள் அளித்த வாக்கும் பத்திரமாக இருக்கும்; வேட்பாளரை, மக்கள் பிரதிநிதியை அதைவிடப் பத்திரமாக நாங்கள் பார்த்துக்கொள்வோம்.

இங்கே சிலர் கூறுவார்கள், ஆளுங்கட்சிக்கு வாக்களித்தால் எல்லாம் கிடைக்கும் என்று. ஒன்றுமே கிடைக்காது. இந்த தேர்தலில் முதலமைச்சர் விஜய் எனக்குச் சொந்தக்காரராகவே ஆகிவிட்டார். ஏனென்றால் எங்களுடைய அண்ணன் மு.க.ஸ்டாலினை பார்த்து My dear sweet uncle என்றார். அதனால் நான் அவரை அன்புத் தம்பி விஜய் என்று அழைப்பதில் தவறில்லை.

### அன்புத் தம்பியின் மாற்றம்தான் என்ன?

அன்புத்தம்பி விஜய் தேர்தலுக்கு முன்னால் உங்களையெல்லாம் பார்த்தார். பெரிய மாற்றத்தைக் கொண்டு வருவேன், இந்த ஆட்சியில் சட்டம்ஒழுங்கு சரியில்லை, எதுவுமே சரியில்லை, எந்த முன்னேற்றமும் இல்லை என்று கூறி பல்வேறு தேர்தல் வாக்குறுதிகளை அளித்தார்.

குறிப்பாக ஆறு சிலிண்டர்கள், ரூ.2,500 மகளிர் உரிமை தொகை, 5 ஏக்கருக்கும் குறைவாக நிலம் வைத்துள்ள விவசாயிகளுக்குக் கடன் தள்ளுபடி என பல அறிவிப்புகளை வெளியிட்டார். ஆனால் இப்போது விவசாயியையே தள்ளுபடி செய்துவிட்டார், கடனைத் தள்ளுபடி செய்யவில்லை.

அதைத் தாண்டி வேலை இல்லாத பட்டதாரிகளுக்கு ரூ.4,000 உதவித்தொகை என்றார். ஆனால் ரூ.4,000 வந்ததா என்றால் வரவில்லை. ரூ.4,000 வரவில்லை. ஆனால் அந்த வேலையில்லா பட்டதாரி படத்தில் நடித்த தனுஷே அரசியலுக்கு வந்துவிட்டார்.

### மின் கட்டணம் உயர்வு!

மின்சாரக் கட்டணம் குறைக்கப்படும் என்றார்கள். ஆனால், அன்று ரூ.200 வந்த கட்டணம் இன்று ரூ.2,000, ரூ.4,000 என உயர்த்தப்பட்டு, ரூ.20,000 வரை கூட வருகிறது. இங்கு மின்சாரமே இல்லாததற்கு மின் கட்டணம் கட்ட வேண்டியிருக்கிறது. இடைத்தேர்தல் நடக்கும் இந்தத் தொகுதியிலேயே இரவில் ஒரு நாளைக்கு மூன்று முறை மின்வெட்டு ஏற்படுகிறது. அப்படியானால் தமிழ்நாட்டின் மற்ற பகுதிகளில் எவ்வளவு மின்வெட்டு இருக்கும் என்று யோசித்துப்பாருங்கள்.

பஞ்சாப்பில் 15 மணி நேரம் மின்வெட்டு ஏற்படுகிறது என்று அமைச்சர் கூறுகிறார். அதற்குப் போட்டியாக இங்கே 20 மணி நேரம் மின்வெட்டு ஏற்பட்டு, 4 மணி நேரம் மின்சாரம் வந்தாலே பெரிய விஷயமாக இருக்கும் போலிருக்கிறது. இதற்கான காரணத்தை கேட்டால், ஃபியூஸைப் பிடுங்கிச் சென்றுவிடுகிறார்கள் என்கிறார்கள்.

என்ன கேள்வி கேட்டாலும் தண்ணீர் இல்லை, காற்று இல்லை, மழை இல்லை; சட்டம்ஒழுங்கையும் பாதுகாக்க முடியவில்லை. அன்புத்தம்பி விஜய்யால் சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க முடியவில்லை. அந்த ஃபியூஸ் கட்டையைப் பிடுங்கிச் செல்பவர்கள் யாரென்று நான்கு மாதங்களாக உங்களால் கண்டுபிடிக்க முடியாதா, இதைக் கூடவா செய்ய முடியாது. அப்பாட்டியானால் பிறகு எதற்கு இந்த ஆட்சி.

பெரிய மாற்றத்தைக் கொண்டுவர வந்த இந்த ஆட்சியில், நம்முடைய தலைவர் அண்ணன் தளபதி மு.க.ஸ்டாலின் கூறியது போல இரண்டே இரண்டு விஷயங்களுக்குத்தான் போட்டி. ஒன்று மின்வெட்டு. இன்னொன்று அரிவாள் வெட்டு.

### நான்கு மாதங்களில் 550 குற்றச்சம்பவங்கள்!

இப்போது அரிவாள் வெட்டுக்கு வருவோம். ஆட்சிக்கு வந்து நான்கு மாதங்கள் ஆகின்றன. இந்த நான்கு மாதங்களில் 550 குற்றச்சம்பவங்கள்; குழந்தைகள் உட்பட 200 கொலைகள்; 300க்கும் மேற்பட்ட பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்கள்; 8 காவல் மரணங்கள், 10 ஆணவக் கொலைகள்! இதையெல்லாம் வேடிக்கை பார்த்துக்கொண்டிருப்பதற்கு ஓர் ஆட்சி, ஓர் அதிகாரம், ஒரு முதலமைச்சர் தேவையா என்று நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

தேர்தல் நேரத்தில் மக்களிடம் பேசியது மட்டுமின்றி, குழந்தைகளிடமும் விஜய் ஓட்டு கேட்டார். நண்பா, நண்பீஸ், வீட்டில் சென்று சாக்லேட் கேட்டு அடம் பிடிப்பீர்கள் அல்லவா, அதுபோல மாமாவுக்கு ஓட்டுப் போடச் சொல்லி அடம் பிடியுங்கள் என்று குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுத்தார். யாராவது குழந்தைகளைத் தேர்தலுக்குப் பயன்படுத்துவார்களா என யாரும் சிந்திக்கவில்லை.

குழந்தைகளுக்கு பாதுகாப்பு இருக்கிறதா?

ஆனால் அதையும் செய்தார் முதலமைச்சர் விஜய். அப்படிச் செய்துவிட்டு இன்று அந்த குழந்தைகளின் நிலைமை என்ன. மதுரையில் 16 வயதுச் சிறுவன் படுகொலை செய்யப்பட்டு, கழிவுநீர்க் குட்டையில் வீசப்பட்டிருக்கிறான். அந்தப் பையனின் தாயும் தந்தையும் தன் பிள்ளைக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என்பதற்காகப் போராடுகிறார்கள். ஆனால், காவல்துறை அவர்களின் கழுத்தில் மிதித்து இழுத்துச் சென்று சிறையில் அடைக்கிறது. நேற்று இந்தத் தொகுதியிலும் போராடிய ஒரு 15 வயதுச் சிறுவனைக் கைது செய்து அழைத்துச் சென்றிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, மதுராந்தகத்திற்கு முதலமைச்சர் பிரச்சாரத்திற்குச் செல்கிறார். அவர் பிரச்சாரத்திற்குச் செல்லும் வழியில் சாலைகளையெல்லாம் சீரமைக்கிறார்கள், அதில் தவறில்லை. ஆனால் அங்கே வண்டலூர் அருகே ஒரு கொடூரம் நடக்கிறது. ஒரு சிறுமி பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்படுகிறாள்.

### மருந்து தட்டுப்பாடு!

ஆனால் இந்த விஜய்யின் தவெக அரசு மாற்றம், மாற்றம் என்று நம்மையெல்லாம் ஏமாற்றி உருவான இந்த அரசு, தான் செல்லும் இடத்தில் ஒரு குற்றச்சம்பவம் நடந்துவிட்டது என்று வெளியில் தெரியக்கூடாது என்பதற்காக, அந்தச் சிறுமியின் மீது அபாண்டமாகப் பழிபோட்டு, தேர்வு எழுதுவதற்குப் பயந்துகொண்டு அந்தச் சிறுமி பொய் சொல்கிறாள் என்று கூறுகிறார்கள். இப்படிப்பட்ட கொடூரமான, மனசாட்சியே இல்லாத ஆட்சிதான் இன்று நடைபெற்றுக்கொண்டிருக்கக்கூடிய தவெக ஆட்சி.

எந்தக் குழந்தைகளிடம் கெஞ்சி, பிச்சையெடுத்து ஓட்டு வாங்கினீர்களோ இன்று அந்தக் குழந்தைகளுக்குப் பாதுகாப்பில்லை. குழந்தைகளுக்குப் பாதுகாப்பில்லாத ஓர் இடத்தில் இருந்துகொண்டு இன்று தங்க மோதிரம் போட்டுக்கொண்டிருக்கிறீர்கள். இந்த ஆட்சியில் குழந்தைகளின் உயிருக்கு உத்தரவாதம் இல்லை.

ஊரெல்லாம் டெங்கு காய்ச்சல். ஒரு வயதுக் குழந்தையும், ஏழு வயதுக் குழந்தையும் இறந்து போயிருக்கிறார்கள். அதைப்பற்றியெல்லாம் இவர்களுக்கு அக்கறையோ கவலையோ இல்லை. பிறந்த குழந்தைகளுக்குத் தர வேண்டிய மருந்துகள் கிடைக்கவில்லை. முக்கியமாக சர்ஃபேக்டன்ட் எனும் பிறந்த குழந்தைகளுக்கான மருந்துக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது. மருத்துவமனைகளில் மருத்துவர்கள் பதைபதைத்துக் கொண்டிருக்கும் நேரத்தில், தாய்மாமன் சீர் என்றொரு திட்டத்தைக் கொண்டு வந்து, மருத்துவர்களை நகை வாங்க நகைக்கடைக்கு அனுப்பிக்கொண்டிருக்கக்கூடிய ஆட்சிதான் இந்த ஆட்சி.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், பெண்கள் யாரையும் எதிர்பார்த்து நிற்கக் கூடாது; தனியாகத் தன்னம்பிக்கையோடு தலைநிமிர்ந்து வாழுங்கள். பெண்கள் சுயமாக நில்லுங்கள், படியுங்கள், சுயமாகச் சம்பாதியுங்கள் என்று பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் முதல் நம்முடைய அண்ணன் தளபதி வரை வழிகாட்டினார்கள். நீ கல்லூரிக்குச் சென்று படிக்க மாதம் 1,000 ரூபாய் தருகிறேன். பணமில்லை என்று படிப்பை நிறுத்திவிடாதே என்று உதவி செய்த சகோதரன், தந்தை அண்ணன் மு.க.ஸ்டாலின்.

இப்போது படித்துவிட்டு வந்துவிட்டாயா, அரசுப் பணியிடங்களில் பெண்களுக்கான இடஒதுக்கீட்டை 40 சதவீதமாக உயர்த்தித்தருகிறேன் என்றவர் தலைவர் மு.க.ஸ்டாலின். சொந்தமாகத் தொழில் தொடங்க உதவிகள் செய்து, பெண் தன் காலில் நிற்க வேண்டும் என்று வழிகாட்டிய இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம்.

### இதுவா முன்னேற்றம்?

இன்று மீண்டும் 50 ஆண்டுகள், 100 ஆண்டுகளுக்கு முன்பிருந்த தாய்மாமன் சீர் என்பதைக் கொண்டுவந்து பெண்களைப் பின்னுக்குத் தள்ளுகிறீர்களே, இதுவா மாற்றம்? இதுவா முன்னேற்றம்?

இங்கே வந்திருக்கக்கூடிய சகோதரிகள், நம்முடைய சுகன்யா ஆகியோர் தாய்மாமனுக்கே சீர் தரக்கூடிய அளவிற்கு இன்று படித்துப் பட்டம் பெற்றவர்களாக இருக்கிறார்கள் என்றால் அதுதான் மாற்றம்.

பெண்களுக்குப் பாதுகாப்பு தருவதில்லை, குழந்தைகளைப் பாதுகாப்பதில்லை, குழந்தைகளைக் காப்பாற்ற மருந்து மாத்திரைகளை வாங்க அக்கறை காட்டுவதில்லை. உங்களுடைய பிரச்சாரத்திற்காக, பாதிக்கப்பட்ட ஒரு சிறுமி சொல்வதைப் பொய் என்று மனசாட்சியே இல்லாமல் கூறக்கூடிய ஓர் ஆட்சி தமிழ்நாட்டிற்குத் தேவையா என்று சிந்திக்க வேண்டிய நேரம் இது.

### மக்களுக்காக நிற்கும் இயக்கம் தி.மு.க.!

இதில் மதுராந்தகத்திற்குச் சென்று வேறு ஒன்று சொல்கிறார். ஏதோ பா.ஜ.க.வுக்கு நாம் பயந்துகொண்டிருக்கிறோமாம். தமிழ்நாட்டின் பா.ஜ.க.தான் தி.மு.க.வாம்.

பிரதமர் தமிழ்நாட்டிற்கு வந்தபோது அவருக்குக் கருப்புக் கொடி காட்டிய இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம். ஒன்றிய அரசு இயற்றிய மசோதாக்களுக்கு எதிராகச் சட்டமன்றத்தில் தீர்மானங்களைக் கொண்டுவந்தவர் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்.

நாடாளுமன்றத்தில் பிரதமராக இருந்தாலும், உள்துறை அமைச்சராக இருந்தாலும், வேறு யாராக இருந்தாலும் எதிர்த்துக் கேள்விகள் கேட்கத் துணியக்கூடிய இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம்.

எந்தப் போராட்டத்திலும் மக்களோடு நிற்கக்கூடியவர்கள், மொழிக்காக, மத நல்லிணக்கத்திற்காக, ஒடுக்கப்பட்ட மக்களுக்காகத் தொடர்ந்து குரல் கொடுத்துக்கொண்டிருக்கக்கூடிய இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம்.

அன்புத்தம்பி விஜய் அவர்களே நாங்கள் பா.ஜ.க. என்றால் அண்ணன் திருமாவளவன் இயக்கத்தில் இருக்கக்கூடிய வன்னியரசு எழுந்து சட்டமன்றத்தில் மோடியைப் பற்றிப் பேசியபோது, அய்யய்யோ வேண்டாம், அந்தப் பேச்செல்லாம் இங்கு வேண்டாம், அதை அவைக்குறிப்பில் இருந்து நீக்கிவிடுங்கள், ரப்பரை வைத்து அழித்துவிடுங்கள் என்று ஏன் பயந்தீர்கள்.

உண்மையில் மக்களின் நலன்களைப் பாதுகாக்கவும், தமிழ்நாட்டின் உரிமைகளை மீட்கவும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வாக்களியுங்கள். உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்துச் சகோதரி சுகன்யா அவர்களைப் பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்ய வேண்டும்.

இவ்வாறு கனிமொழி ராஜாத்தி கருணாநிதி பேசினார்.



மதுராந்தகம் சட்டமன்ற இடைத்தேர்தலில் போட்டியிடும் தி.மு.க. வெற்றி வேட்பாளர் இ.பரந்தாமனை ஆதரித்து, சேலம் மத்திய மாவட்டச் செயலாளர் முன்னாள் அமைச்சர் இரா. இராஜேந்திரன், கழகத் தேர்தல் பணிக்குழுத் தலைவர் முன்னாள் அமைச்சர் ஆர்.எஸ். இராஜகண்ணப்பன், சென்னை தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஏ.எம்.வி. பிரபாகரராஜா ஆகியோர் சேலம் மத்திய மாவட்ட கழகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள மதுராந்தகம் வடக்கு ஒன்றியம் கள்ளபிரான்புரம் ஊராட்சி, 73வது வாக்குச்சாவடிக்குட்பட்ட வள்ளுவபாக்கம் பகுதியில் பொதுமக்களை நேரில் சந்தித்து, உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகளை சேகரித்தனர்.

## பொறுப்பற்ற த.வெ.க. ஆட்சியில்

# காவலர்களுக்கும் பாதுகாப்பற்ற சூழல் நிலவுகிறது!

## கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. கண்டனம்!

சென்னை, அக்.1-

பொறுப்பற்ற த.வெ.க. ஆட்சியில் காவலர்களுக்கும் பாதுகாப்பற்ற சூழல் நிலவுகிறது என்று கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. கண்டனம் தெரிவித்துள்ளார்.

கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. விடுத்துள்ள ட்விட்டர் பதிவு வருமாறு:-

**பரமக்குடி அரசு மருத்துவமனை அருகே ஆட்டோ ஓட்டுநர்களிடையே நடந்த மோதலைத் தடுக்கச் சென்ற தலைமைக் காவலர் கண்ணகி அவர்கள் உயிரிழந்த சம்பவம் அதிர்ச்சியளிக்கிறது.**



**இந்தப் பொறுப்பற்ற த.வெ.க. ஆட்சியில் இதுநாள் வரை பொதுமக்கள்தான் பாதுகாப்பற்ற சூழ்நிலையில் இருந்தார்கள்; இப்போது காவலர்களுக்கும் பாதுகாப்பற்ற சூழல் உருவாகிக்கொண்டிருக்கிறது. த.வெ.க. அரசின் பொறுப்பற்றத்தனத்தால் தமிழ்நாடு அன்றாடம் அமைதியை இழந்துகொண்டிருக்கிறது.**

இவ்வாறு கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. ட்விட்டர் பதிவில் தெரிவித்துள்ளார்.



மதுராந்தகம் தொகுதி இடைத்தேர்தலில் அச்சிறுப்பாக்கம் பேரூராட்சி பாகம் எண் 207ல் கழக வெற்றி வேட்பாளர் ஐ.பரந்தாமன் அவர்கள் வாக்கு சேகரித்தார். உடன் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் , கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், கழக வழக்கறிஞர் அணித்தலைவர் கிரிராஜன் எம்.பி,மற்றும் கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்,.